செய்தி வெளியீடு எண்:162 நாள்:24.02.2021

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 23.2.2021 அன்று தலைமைச் செயலகத்தில், சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை சார்பில் 4 கோடியே 71 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 ஒருங்கிணைந்த சேவை மையக் கட்டடங்கள், பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டடம், தொழிற்பயிற்சி மையக் கட்டடம் மற்றும் உணவருந்தும் கூடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். மேலும், 21 கோடியே 24 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சமூகநல ஆணையரக அலுவலகக் கட்டடம் மற்றும் 2 பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

ஒருங்கிணைந்த சேவை மையத் திட்டத்தின் மூலம், குடும்பத்திலும், பொதுவெளியிலும் வன்முறையால் பாதிக்கப்படும் மற்றும் நிராதரவாக விடப்படும் பெண்களுக்கு தேவைப்படும் துரித சேவைகளான மருத்துவ உதவி, காவல் உதவி, சட்ட உதவி, மனநல ஆலோசனை, தற்காலிக தங்கும் வசதி ஆகியவற்றை ஒரே கூரையின் கீழ் வழங்கிடும் வகையில் கோயம்புத்தூர், தஞ்சாவூர், தேனி மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரி வளாகங்களிலும், பெரம்பலூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வளாகங்களிலும் 2 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 ஒருங்கிணைந்த சேவை மையக் கட்டடங்கள்;

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், தாராபடவேடு கிராமம், ராஜீவ் காந்தி நகரில், தரை மற்றும் முதல் தளத்துடன், 21 தங்கும் அறைகள், சமையல் அறை, உணவருந்தும் அறை ஆகிய வசதிகளுடன் 50 மகளிர் தங்கும் வகையில், 1 கோடியே 20 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டடம்;

சமூக பாதுகாப்புத் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், ஆத்தூர் அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனத்தில் 39 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில்

கட்டப்பட்டுள்ள தொழிற் பயிற்சி மையக் கட்டடம்; வேலூர் மாவட்டம், காட்பாடி, அன்னை சத்தியா அரசினர் குழந்தைகள் இல்லத்தில் 23 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உணவருந்தும் கூடம்;

என மொத்தம் 4 கோடியே 71 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமூகநலத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

சென்னை மாவட்டம், காமராஜர் சாலை, டாக்டர் ஜெ ஜெயலலிதா வளாகத்தில் 26,045 சதுர அடி கட்டட பரப்பளவில், அலுவலக அறைகள், கூட்ட அரங்கம், பார்வையாளர்கள் அறை, நூலகம், பதிவறை, கணினி அறை, வாகனம் நிறுத்துமிடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் 8 கோடியே 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சமூகநல ஆணையரகத்திற்கான அலுவலகக் கட்டடம்;

செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரியில் 7 கோடியே 44 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 158 மகளிர் தங்கும் வகையில் நவீன வசதிகளுடன் கட்டப்படவுள்ள பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டடம்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பொன்மலையில் 5 கோடியே 62 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 104 மகளிர் தங்கும் வகையில் நவீன வசதிகளுடன் கட்டப்படவுள்ள பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டடம்;

என மொத்தம் 21 கோடியே 24 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சமூகநலத் துறை சார்பில் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

குடும்ப வன்முறை, பாலியல் துன்புறுத்தல் போன்ற கொடுமைகளால் வீடுகளிலோ, வெளியிடங்களிலோ, பணிபுரியும் இடங்களிலோ பாதிக்கப்படும் பெண்கள் அவசர உதவி பெறும் வகையில் 24 மணிநேரமும் செயல்படும் பெண்களுக்கான “181” என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் சேவை மாண்புமிகு அம்மாவின் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம், அவசர காலங்களில் பெண்கள் இந்த கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு காவல்துறை, மருத்துவமனை,

ஆம்புலன்ஸ், சட்டஉதவி போன்ற அத்தியாவசிய துறைகளின் உதவிகளை பெற்று வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக, “181” என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் சேவையுடன், நிர்பயா திட்டத்தின் கீழ் 12 கோடியே 96 லட்சம் ரூபாய் செலவில், பெண்களின் அவசர தேவை மற்றும் துயர் களைய ஏதுவாக, கூடுதலாக www.facebook.com/whl.tamilnadu என்ற முகநூல், twitter.com/whl181 என்ற டிவிட்டர், 181 whl என்ற யுடியூப், www.instagram.com/whl181tn என்ற இன்ஸ்டாகிராம், whl@tn.gov.in என்ற மின்னஞ்சல் ஆகிய சிறப்பு சேவைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி.சரோஜா, தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை செயலாளர் திருமதி எஸ். மதுமதி, இ.ஆ.ப., தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்தின் முதன்மை திட்ட அலுவலர் திருமதி டி. சபிதா, இ.ஆ.ப., (ஓய்வு), சமூக பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. ஆர். லால்வேனா, இ.ஆ.ப., சமூகநல ஆணையர் திரு.த. ஆபிரகாம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**